# அன்பின் ஆட்சியிலே

அன்பின் ஆட்சியிலே வைராக்கித்திற்கும் பிடிவாதத்துக்கும் மதிப்பு இல்லை.யிலே இன்பமும், தளர்ச்சியிலே பெருமையும் அடையும் விசித்திர நிலையை அதில் காணலாம்.

பட்டுப்பூச்சியைப்போல் அலக்காக வந்து உள்ளே நாற்காலியிலே உட்கார்ந்தாள் வத்ஸலா கை, புத்தகம் ஒன்றை எடுத்தது. ஆனால் அந்தப் பட்டப்பகல் வேலையிலே படிக்கத் தோன்றவில்லை போலும்! அதை வைத்துவிட்டு தாழ்வாரத்திலே அமர்ந்திருந்த தன் மன்னியிடம் வந்தாள்.

முறத்து அரிசியிலிருந்து கல்லையும் நெல்லையும் பொறுக்கிக் கொண்டிருந்த ருக்மிணி தலை நிமிர்ந்து வத்ஸலாவை நோக்கினால். வத்ஸலா, "நானும் பொறுக்கட்டுமா?" என்று கேட்டவாறே அமர்ந்தாள்.

"வேண்டாமே, வத்ஸலா. பத்திரிகை வந்திருக்கிறதே! தொடர்கதையை வாசித்துக்காட்டுங்கள்; நான் அரிசி பொறுக்கிக்கொண்டே கேட்கிறேன்" என்றால் ருக்மிணி.

"தொடர்கதை இந்த விசை ஜோராயிருக்கிறது, மன்னி" என்று கூறியவண்ணம் புத்தகத்தை எடுத்து வந்து படிக்கத் தொடங்கினாள் வத்ஸலா.

கதையிலே இளந்தம்பதிகள் கடிதம் எழுதிக்கொள்ளும் கட்டம் வந்தது. அதிலே ஏதோ விசேஷம் இருக்கவே, வாய் விட்டுச்சிரித்துவிட்டாள் ருக்மிணி.

முன்னமேயே படித்திருந்ததனாலோ காதல் வாழ்க்கையின் ருசியை இன்னும் காணாததாலோ, வத்ஸலாவுக்குச் சிரிப்பு வரவில்லை. அந்தக் கட்டம் சுவை கொண்டதாய்த் தோன்றினும், விசேஷம் எதுவும் புலப்படவில்லை. வத்ஸலா, "சிரிப்பானேன், மன்னி?" என்று கேட்டாள். மழுப்பினாள் ருக்மிணி. ஆனால் வத்ஸலாவா சும்மா விடுவாள்? "எதற்கோ சிரித்தேன்!" என்று சொல்லப் புது நாட்டுப் பெண்ணாகிய ருக்மிணிக்குத் துணிவு ஏது?

லேசாக புன்னகை பூத்தாள் "ஒன்றும் இல்லை உங்கள் அண்ணா எனக்கு எழுதிய முதற் கடிதங்கூடக் கிட்டத்தட்ட இப்படித்தான் இருந்தது!" என்றாள்.

"ஒஹோ!" என்று குறும்பாக இழுத்தாள் வத்ஸலா; "ஏன் மன்னி, அண்ணா முதலில் உனக்கு எழுதினானா? நீ முதலில் எழுதினாயா?" என்று ஒரு கேள்வியைப் போட்டால் வத்ஸலா.

ஒரு தடவை அந்த விஷயமாய்ப் பேசிவிட்டதனாலோ, கணவனைப்பற்றி உரிமையுடன் நினைத்ததனாலோ ருக்மிணி சலனமற்ற எடுப்பான தொனியிலே, "அவர் போட்டார். நான் எப்படி முதலில் போடுவேன்? அவர்தான் போடவேணும். போட்டார்" என்றால்.

எப்பொழுதுமே நிதானமாகப் பேசும் அவள் இன்று பேசிய கம்பீரத்தை வத்ஸலா இது வரையில் கண்டதில்லை.

"அவன் தான் போட்டானா முதலில்? அட அசட்டு அண்ணாவே! பெண்டாட்டிக்கு குழைகிறவன் தானா?" என்று சொன்னாள் அவள்.

இதைக் கேட்டதும் வருத்தமாக இருந்தது ருக்மிணிக்கு. புது நூல் அணிந்து புது மணம் புரிந்து புதுமையான வாழ்கையின் இன்பமெல்லாம் நுகரும் பூரிப்புடன் புக்ககம் வந்திருந்த அவள், வந்த பிறகு சூழ்நிலையின் சுழலிலே பல ஆசைகளைப் பறிகொடுத்து விட்டாள். பல ஆவல்களை அடக்கிகொண்டாள். நிதான புத்தியுள்ள கணவன், அவள் மேலே அன்பைச் சொரியும் வகையிலே நடந்து கொள்ளவில்லை. ருக்மிணியும் அதற்கு ஏற்றபடி இருந்தாள். அப்படி இருக்க, நாத்தனார் நாவிலே தீக்கொண்டு சுடுசொல் பகர்வதை ஆற்றமாட்டாமல் ஏற்றாள் ருக்மிணி. பதிலே பேசவில்லை.

மதங்கொண்ட வத்ஸலா, "அண்ணா இப்படி ஆகிவிடுவான் என்று நினைக்கவே இல்லை! பெண்டாட்டி கடிதம் போடுவதற்குள் அவசரமா அவனுக்கு? ஐயோ, ராமா!" என்று அங்கலாய்த்தாள்.

"புருஷர்கள் போடாமல் பெண்கள் முதலில் எழுதுவார்களா என்ன? எழுதத்தான் தைரியம் வருமா? அவர் எழுதினதற்குப் பதில் எழுதவே எனக்குப் பயமாய் இருந்ததே! அவர் போட்டிராவிட்டால் நான் எழுதியே இருக்கமாட்டேன், அம்மா" என்றாள் ருக்மிணி. வருத்தத்தை எல்லாம் மறைத்து, தன் உண்மையான அநுபவத்தைச் சொன்னாள் அவள். ஆனால் வத்ஸலாவுக்கு அது பிடிக்கவில்லை.

"அண்ணா எழுதாவிட்டால் எழுதக் கூடாதென்று உனக்குப் பிடிவாதம். இந்தச் சமத்து அண்ணா குடுகுடென்று எழுதி வைத்திருக்கிறான். விறாப்பு எல்லாம் எங்கே போயிற்றோ?" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள்.

மனஸ்தாபத்துடன் பிரிவது அழகல்லவே! ருக்மிணி சாந்தமாக, "உங்களுக்குக் கல்யாணம் ஆகும்பொழுது .பாருங்களேன்!" என்றாள்.

வத்ஸலா சிறிதும் கூசாமல், "புருஷன் புருஷனாய் லக்ஷ்ணமாய் இருக்கவேணும். பெண்டாட்டி தாஸனாய் இருந்தால் எனக்குப் பிடிக்காது!" என்று பதிலளித்தவாறே போய்விட்டாள்.

அவளுடைய அலட்சியத்தையும், தர்க்கமனப்பான்மையும், அவற்றுக்கெல்லாம் இலக்காகத் தான் செயலற்றுத் துணிவற்று வாக்குரிமையற்று இருந்ததையும் எண்ணி, ருக்மிணியின் மனம் புண்ணாகி வருந்தியது, 'இதையெல்லாம் பொருட்படுத்தி வருந்துவது கூடாது' என்று மறக்கப் பார்த்தாள் ஆனால் மனம் கசிந்தது. மறக்க முடியவில்லை.

'வத்ஸலா புருஷனுக்கு முதலிலே எழுதினாலும் எழுதுவாள். அப்படி இருக்கக் கூடியவள் தான். அதனால்தான் அவள் அப்படிப் பேசுகிறாள். தவறு என்ன?' என்று நினைத்து ஒருவாறு சமாதானம் அடைந்தாள். 'வத்ஸலாவுக்குக் கல்யாணமாகி அவள் எப்படி இருக்கிறாள்; பார்க்க வேண்டும்' என்று குழந்தைபோல எண்ணமிட்டாள்.

அடுத்த வருஷம் வத்ஸலாவுக்குத் திருமணமாயிற்று. வத்ஸலா தன் மதனியின் மாமன் மகனையே கல்யாணம் பண்ணிக்கொண்டாள். உயர்ந்த பதவியும் கம்பீரமும் கவர்ச்சியும் கொண்ட கணவன் வாய்த்ததிலே அவள் பூரித்திருந்தாள்.

வத்ஸலா மணமான மறு வாரமே கணவனோடு புறப்பட்டுப் போவதாக ஏற்பாடு. 'கடிதம் எழுத ஏது நாள்?' என்று எண்ணமிட்டாள் ருக்மிணி. அவளுடைய எண்ணத்துக்கு உகந்தபடியே ஏற்பாடு மாறிவிட்டதும் வத்ஸலா ஏமாற்றமுற்றாள்; ருக்மிணி ஆச்சரியமுற்றாள்.

வத்ஸலாவுக்கு 'இண்டர்மீடியேட்' படிப்பு முடிய ஒரு வருஷம் இருக்கிறது என்பதனாலும், அவள் கணவன் ராஜாராமனுக்கும் சில முக்கியமான பரிட்சைகளும் அலுவல் பொறுப்புகளும் அந்த வருஷம் இருந்ததனாலும், பழைய காலத்து இளம் தம்பதிகளைப் போலவே இவர்களும் ஒரு வருஷம் பிரிந்து இருக்க ஏற்பாடு ஆயிற்று.

திருமணமாகி இரண்டு மாதம் ஆகியும் வத்ஸலாவுக்கும் அவள் கணவனுக்கும் கடிதப் போக்குவரத்து ஏற்படவில்லை. ருக்மிணியின் மாமியாரும் வத்ஸலாவின் அன்னையுமான பாகீரதியம்மாள்தான் இதுபற்றிக் கவலைப்பட்டாள், கவலையை வெளியிட்டாள்.

"எழுதிப் போடேண்டி அம்மா ஒரு கடிதம்!" என்று பல தடவை பெண்ணுக்குச் சொன்னாள். ஆனால் வத்ஸலா தாயின் சொல்லைத் தட்டிக்கழித்துக்கொண்டே வந்தாள்.

"நான் போட்டால் அவர் போடுவார் பிறகு நானும் பதில் போட்டாகவேணும். இந்தக் காரியத்தை வைத்துக்கொண்டாள் படிப்பு உருப்பட்டாற்போல்தான்!" என்று முதலில் பதில் சொன்னாள்.

"அப்புறம் எழுதினால் எழுது! எழுதாவிட்டால் போ! முதலில் ஒன்று எழுதிப்போட்டுவிடு" என்று பாகீரதியம்மாள் சொன்னாள். அதற்குப் பிறகு அன்னை புத்திமதி கூற வரும்பொழுதெல்லாம் வத்ஸலா கடுமையாக "முடியாது" என்று விறைப்புடன் போய்விடலானாள். பதிலே பேசாமல் வெளியறி விடுவாள் சில சமயம்.

ஒரு நாள் பாகீரதியம்மாளின் பொறுமை அளவுக்கு மீறிவிட்டது. "ஏண்டி வத்ஸலா, நானும் எத்தனை நாள் சொல்கிறது? உனக்கே தோன்ற வேண்டாம்? ஆண்பிள்ளை அவர் நீதானேடி எழுதிப்போடவேணும்? நீ எழுதாததனால் மாப்பிள்ளை அப்பா எழுதினதற்கும் பதில் சரியாகப் போடவில்லை" என்று அங்கலாய்த்துத் தன் பெண்ணைக் கோபித்துக்கொண்டாள்.

வேங்கைபோல வெகுண்டாள் வத்ஸலா. "ஆமாம்; மன்னிதான் முதலிலே எழுதிப்போட்டாளாக்கும்! அண்ணா அல்லவா முதலிலே மன்னிக்கு எழுதினான்? அது தெரியாமல் பேசுகிறாய் நீ" என்று சொன்னாள்.

பெண்ணிடம் இந்தத் தாக்குதலை எதிர்பாராத பாகீரதியம்மாள் துணுக்குற்றாள். மடக்கிப் பேசிவிட்ட மகளைச் சமாதானம் செய்யத்தான் அவள் விழைந்தாள்.

"போனால் போகிறது. அதனால் என்ன? ஒவ்வொருத்தர் ஒவ்வொரு தினுசு. அப்போது அண்ணாவுக்கு வேலை இல்லை. உன் அகத்துக்காரர் வேலையில் இருக்கிறார். எழுத ஒழியவில்லைபோல் இருக்கிறது. நீதான் எழுதிப் போடேன்; தேய்ந்தா போவாய்?" என்று நயமாகப் பெண்ணுக்குப் பதிலளித்தாள்.

இந்தச் சம்பாஷணையைச் செவியுற்ற ருக்மிணி ஓடி வந்து, நாலு வார்த்தை பேச ஆவலுற்றாள். ஆனால் அந்த ஆவலை அடக்கிக் கொண்டு வத்ஸலா என்ன மறுமொழி அளிக்கப் போகிறாள் என்று கவனித்தாள்.

"நம் அகத்துப்பேர் இளித்த வாயர்கள்; பிறத்தியார் கெட்டிக்காரர்கள் ஆகிவிடவேண்டுமாக்கும்! அவர் போடட்டும். நான் பதில் எழுதிப்போடுகிறேன். நான் முதலில் எழுத முடியாது" என்று வத்ஸலா பேசினாள். இப்பொழுது ருக்மிணி புன்னகையோடு வந்தாள். புக்ககம் வந்து ஒரு வருஷம் ஆகிவிட்டதால் தயக்கம் அதிகம் இல்லை.

"ஏன் வத்ஸலா? முந்தி என்ன சொன்னீர்கள்? பெண்டாட்டிதான் முதலில் கடிதம் போடவேணும், புருஷன் குழைந்துகொண்டு முன்னாடி எழுதுகிறதா என்று சொன்னீர்களே! இப்போது 'நம் அகத்திலே' என்று சொல்லி அம்மாவை ஏமாற்றப் பார்க்கிறீர்களே!" என்றாள் ருக்மிணி.

"அப்படி நீயும் சற்றுச் சொல்லம்மா. இந்தப் பெண்ணுக்கு ஒரு சமர்த்தும் தெரியவில்லை!" என்றாள் பாகீரதி, நாட்டுப்பெண்ணை நோக்கி, கோபமுற்ற வத்ஸலா, "மன்னி சொல்லுவாள்; சொல்லமாட்டாளா? பிறத்தியாருக்கு வாத்தியார்!" என்று சீறிவிட்டுப் போய்விட்டாள்.

"நானா?" என்ற வினா ருக்மிணியின் உள்நாக்கிலே தோன்றி அடங்கியது.

சற்று நேரங் கழித்துப் பாகீரதியம்மாள் மீண்டும் பெண்ணிடம் வந்தாள்.

"வத்ஸலா, கோபிக்காமல் கேளடி; தீபாவளிக்கு மாப்பிள்ளையை வரச் சொல்லி அப்பா எழுதினதற்கு அவர் 'பார்க்கிறேன்' என்று எழுதியிருக்கிறாராம். நீயும் ஒரு வார்த்தை 'வாருங்கள்' என்று எழுதினால்தானே அவருக்கு வரத் தோன்றும்? அதுதான் சரியாகவே அவர் எழுதக் காணோம். ஒரு கடிதாசி நீயும் போட்டால் அவர் சந்தோஷப்படுவார்" என்றாள் கவலையுடன்.

"ஆகட்டும் போ; எழுதிப் போட்டுவிடுகிறேன்" என்று சுருக்கமாகப் பதிலை வீசினாள் வத்ஸலா. அதைக் கேட்டுக் கவலை நீங்கினாள் பாகீரதியம்மாள்.

அப்பாவுக்கு அன்று வந்த கணவர் கடிதத்தை வத்ஸலா படித்துத்தான் இருந்தாள். அவளுக்கே ஏமாற்றமாய்த்தான் இருந்தது. தாய் கோபத்துடன் பேச வந்தபோது, அந்த ஏமாற்றம், சினமும் சீற்றமுமாக வெடித்துக்கிளம்பியது. சற்றுப் பொறுத்து அன்னை கனிவோடு

பேசவே, அவளும் தாய்க்கு வேண்டிய விடை அளித்தாள். படிக்கும் பெண், கல்லூரி மாணவி அல்லவா அவள்? அவளுக்கு யோசனை உண்டாயிற்று. தன் சுயகௌரவத்தை விட்டுவிடாமல், தன் கட்சி சாய்ந்ததையும் வெளிக்காட்டாமல், தீபாவளி மவுசையும் இழந்துவிடாமல் சமாளிக்க விரும்பினாள். ஒரு தபால் கார்டு எடுத்தாள். அதன் உச்சியிலே, வர்ணப் பென்ஸில்களால் ஒரு சிறு தேசியக் கொடி வரைந்தாள், அதன் கீழே தீபாவளி அழைப்பை எழுதினால்.

'கணவருக்கு' என்று குறிப்பிட்டு அழைப்பை எழுதிவிட்டு, 'மனைவி வத்ஸலா' என்று கையொப்பமிட்டு, அம்மாவுக்கும் மன்னிக்கும் அதை மிடுக்காகக் காட்டினபிறகு தபாலுக்கு அனுப்பினால்.

அவள் எதிர்பார்த்தபடியே பலன் கிடைத்தது. ராஜாராமன் தான் வந்து சேரும் நாளைக் குறித்துத் தந்தி செய்தி அனுப்பினான். தீபாவளிக்கு இரண்டு நான் முன்பு தந்தி வந்ததால், கற்பனைகள் செய்ய வத்ஸலாவுக்கு வசதி நிறைய இருந்தது. நிலைக்கண்ணாடியின் முன்னே, நின்று பார்த்தாள்; கையிலே ஒரு சிறு கண்ணாடியைப் பிடித்து நின்று நின்று முகத்தைப் பல கோணங்களினின்றும் பார்த்துத் திருப்தியுற்றாள். புடைவைத் தலைப்பைப் பல தினுசாகச் செருகிப் பொருத்தமும் நேர்த்தியும் பார்த்தாள். தினுசு தினுசான காதணிகளை மாற்றி மாற்றி அணிந்து அழகு பார்த்தாள்.

ஆனால் கணவன் தீபாவளிக்கு முதல் நாள் அதிகாலையில் வந்து சேர்ந்தபொழுது அவள் ஐந்தடி ஆழச் சேற்றிலே புதை.ந்துபோன அலங்காரத் தேர்போல ஆகிவிட்டாள்.

அவள் கணவன் ராஜாராமன், மனைவியையும் அவளுடைய பெற்றோரையும் நாடி நாடிப் பேசி முன்வரவில்லை. தன்னுடைய அத்தை மகள் ருக்மிணியுடன் தான் நிறையப் பேசினான். பிறந்தகத்து உறவினன் வந்த ஆனந்தத்தில் ருக்மிணியும் குஷாலாகவே அவனுடன் பேசினாள். "அசட்டு அம்மாஞ்சியா, சமர்த்து மாப்பிள்ளையா நீ என்பதைப் பார்க்கப்போகிறேன்!" என்றுகூடப் பேசினாள் அவனுடன். 'அம்மாஞ்சி மன்னி'யான வத்ஸலாவையும் கிண்டல் செய்து மகிழ்ந்தான்; அம்மாஞ்சியை இன்னும் அதிகச் சலுகையுடன் கோட்டா பண்ணிணாள். ருக்மிணி, அம்மாஞ்சியுடன் வரம்பு மீறிப் பழகிவிடவில்லை எனினும் வத்ஸலாவுக்கு மதனியின் போக்கு ஆச்சரியம் அளித்தது. தன் கணவன் தனக்கு எட்டாதிருக்கிறான்; ஆனால் மதனிக்கு எளியவனாக இருக்கிறான்!

வத்ஸலா கற்பனை செய்த உற்சாகம், இப்பொழுது அவளுக்கு இல்லை. ஏனோ உள்ளத்தின் ஓரத்திலே சோர்வு அரும்பு கட்டிவிட்டது. ராஜாராமனும் அவளுடைய பார்வைகளைச் சந்திக்காமல் இல்லை. ஆனால் அந்தப் பார்வையிலே அன்பும் கனிவும் தவிர நோட்டம் பார்க்கும் நோக்கும் இருந்ததால் வத்ஸலா அவனுடைய கண்களைச் காதற் கண்களாகக் காணவில்லை.

முதல்நாள் முழுதும், பதினெட்டு வயசுப் பெண்ணான வத்ஸலா, நாணத்தை நாணமாகக் காட்டாமல் கடுகடுப்பாக மாற்றித் தாயின் புத்திமதிக்கும் மன்னியின் தூண்டுதலுக்கும் செவிகொடுக்கவில்லை. ஆனால் தீபாவளியன்று கணவனை நாடிப் புறப்பட்டாள். "வத்ஸலாவின் படிப்பு விஷயம் எல்லாம் எப்படி இருக்கிறதென்று கேட்கவேண்டும், சில விஷயங்கள் சொல்ல வேண்டும் என்றிருக்கிறேன்" என்று முதல்நாள் ராஜாராமன் மாமனாரிடம் சொன்னதைக் கவனித்ததனால் தான், வத்ஸலா அவனோடு பேசப் போனாள்.

'படிப்பு விஷயமாகப் பேசும் சாக்கில் தன்னோடு பேச விருப்பம் இருப்பதை வெளியிட்டார்' என்று நினைத்து, உள்ளூற உவகையுடன் போனாள் அவள்.

தலைதீபாவளிப் புடைவையாக அவன் வாங்கி வந்ததை அணிந்து காட்சியளித்த வத்ஸலாவைக் கண்டதும் முகமும் அகமும் மலர, "உட்கார்" என்றான் ராஜாராமன்.

"படிப்பு எப்படி இருக்கிறது?" என்னும் கேள்வியில்தான் பேச்சைத் துவக்கினான். அவள் சமையலும் கற்கவேண்டும் என்றும், வறட்டுக் கல்வியைச் செழிப்புள்ள கல்வியாகப் பகுத்தறிவினாலே மாற்றிப் பயனுற வேண்டும்மென்றும் ஏதோ சொன்ன வண்ணம் இருந்தான்.

கணவனுடைய புத்திமதிகள் அன்புக்கட்டளைகளாக வத்ஸலாவுக்குத் தெரியவில்லை. காதற்கணவனுக்கு, காதற் கண்களுடன் அவளை நோக்கிச் சொக்கியவனாக, ராஜாராமன் தோன்றவில்லை. அன்பும் அக்கறையும் சொல்லளவிலேதான் வெளிவந்தன.

'கடிதப்போக்குவரத்து நடந்திருந்தால் அல்லவோ, எங்களிடையே நேசம் வளர்ந்திருக்கும்?' என்று வத்ஸலா நினைத்தாளோ என்னவோ? நெருங்கிட உறவினனாக அவளுக்குக் கணவன் தோன்றினாலும், அவன் அந்நியன் போலவும் ஒரு பிரமை உண்டாயிற்று. தவித்தாள் வத்ஸலா.

ராஜாராமன், தீபாவளி கழிந்த மூன்றாம் நாள் புறப்படுவதாகக் கூறியிருந்தான். அவன் புறப்படுவதற்கு முதல்நாள் இரவு, பாகீரதியம்மாள் ஒரு டப்பாவிலே பக்ஷணத்தை நிரப்பி வத்ஸலாவிடம் தந்து, மாப்பிள்ளையிடம் சேர்த்துவிடச் சொன்னாள்.

சோர்ந்த மனத்துடன் அதை அவள் எடுத்துக் கொண்டு போனாள் அறையிலே, மேஜையின்மேல் பெட்டியைத் திறந்து வைத்துக் கொண்டு துணிகளை மாட்டியிருந்த ஷ்டாண்டிலிருந்து துணிகளை எடுத்து மடித்துப் பெட்டியிலே வைக்கும் வேலையிலே இருந்தான் ராஜாராமன்.

வத்ஸலா அறையுள் நுழைந்தபொழுது, ஸ்டாண்டின் அருகே, 'பான்ட்' ஒன்றை மடித்துக் கொண்டு நின்றான் ராஜாராமன்.

வந்தகாரியத்தைச் சுருக்கமாக வத்ஸலா கூற□, ராஜாராமனும் சுருக்கமாகவே, "நீயோ அந்தப் பெட்டியிலே வைத்துவிடேன். சரியான சமயத்திலேதான் கொண்டுவந்திருக்கிறாயே!" என்று, இடம் பெயராமலே, கூறினான்.

'என் கையினின்றும் எடுத்துக்கொண்டால் என்னவாம்! தலைதீபாவளிக் கதைகளிலே வருகிறது என்ன? நடக்கிறது என்ன? துளி அன்பு கூட இல்லை. ஊருக்குப் போகும்போது கூடத் துளிக் கனிவு இல்லை!' என்ற ஏக்கம் சுரீலென்று எழுந்தது அந்த நிமிஷம்.

வேதனையுடன் ஒரு தடவை மணாளனை ஏறிட்டு நோக்கிவிட்டுப் பெட்டியின் பக்கம் வந்தாள். திறந்திருந்த பெட்டியிலே டப்பாவை வைத்தாள். சரியாக மூடாது என்பது தெரிந்தும் பெட்டியின் மூடியைச் சாய்த்து இறக்கினாள். கணவன் கவனிக்கிறானா என்று பார்க்கத் திரும்பினாள். அவன் அவளைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். வெட்கத்துடன் பெட்டியின் பக்கமே திரும்பி, டப்பாவை வெளியிலே எடுத்தாள். சில துணிகளை வெளியிலே எடுத்துவிட்டு டப்பாவை வைத்தபிறகு மறுபடி துணிகளை மடக்கி மடித்து வைக்கவேண்டும். எடுப்பதா? உரிமையோடு அவ்வாறு செய்யலாமா? தயக்கமாக இருக்கவே, மீண்டும் கணவன் பக்கம் பார்த்தாள். அவன் குறும்புச் சிரிப்புச் சிரித்தான்.

வத்ஸலா, "சில துணிகளை வெளியிலே வைத்துவிட்டு டப்பாவை வைக்கவேணும்" என்று கூறினாள்.

"எப்படி முடியுமோ அப்படியே வையேன்" என்று பதில் செல்லிவிட்டு, ஓர் அங்கவஸ்திரத்தை மடிக்கத் தொடங்கினான் அவன்.

பெட்டிப் பக்கம் திரும்பி அலுவலைக் கவனித்துக்கொண்டிருந்த வத்ஸலா, பின்னால் காலடியோசை கேட்டுத் திரும்பினாள். திகைத்து நகர முயன்றாள். ஆனால் ராஜாராமன் அவளுடைய கழுத்தை வளைத்துக் கொண்டுவிட்டான்.

ஒரு வினாடி உலகையே மறந்துவிட்ட வத்ஸலா, மறுகணம் வியப்பும் ஆர்வமும் மேலிட விழித்தாள். 'கடைசியில் ஊருக்குப் போகும் பொழுதுதானா எனக்கு இந்தப் பாக்கியம்? என்று அவள் எண்ணமிட்டதைக் கண்கள் கண்ணாடிபோலக் காட்டின. ஆம், தூய்மை படைத்த ஓர் இளம் பெண்ணுக்குக் கணவனின் முதல் ஸ்பரிசந்தானே பெரும் பேறு? "வத்ஸலா, நான் நாளைக்குப் போகவில்லை. நாளை நின்றுபோகிறேன். முட்டாள் தனமாய் மூன்று நாட்களை வீணடித்துவிட்டேனே! பக்ஷணத்தைக் கொண்டுபோய் கொடுத்துவிடு என்றான் ராஜாராமன்.

மந்திரத்துக்கு கட்டுப்பட்டவள்போல் டப்பாவைக் கையில் எடுத்தால் வத்ஸலா.

"இப்பொழுதே உன்னைப் போகச்சொன்னேனா?" என்று அவளுடைய கையைப் பிடித்தான் அவன்.

"போகிறேனே! நாழிகையாயிற்றே!" என்றாள் வத்ஸலா.

"அப்பா! எட்டு நிமிஷமாயிருக்குமா நீ வந்து? 'பக்ஷணம் தின்றார்' என்று அடியேன் ஓர் அடி!" என்று குஷியாக மொழிந்தவாறு டப்பாவைத் திறந்தான். இரண்டு மைசூர்ப்பாகு விள்ளையை வெளியில் வைத்துவிட்டு டப்பாவை மூடினான். ஒரு மைசூர்ப் பாகை விண்டு சிறிது வாயில் போட்டுக்கொண்டான்.

உடனே முகத்தைச் சுளித்து, "ஐய! இது என்ன ருசி! எனக்கு வேண்டாம் போ!" என்று கூறிவிட்டு மனைவியின் முகத்தருகே குனிந்து பக்ஷணத்தின் ருசி இன்மையை விளக்கிவிட்டான்!

"இன்னும் வரவில்லையா வத்ஸலா?" என்று பாகீரதியம்மாள் கேட்டதற்கு, "ஏனம்மா பக்ஷணத்தோடே அவர் அறைக்குப் போகச் சொன்னீர்கள்? விடிந்த பிறகுதானே வர வேண்டும்?" என்று கேட்டாள் ருக்மிணி.

"போதுமடியம்மா; அது வேறே வம்பு!" என்று பைத்தியக்காரத்தனமாக உளறினாள் பாகீரதியம்மாள்.

வத்ஸலா டப்பாவுடன் வந்தாள். "நாளைக்குப் போகவில்லையாம். நாளை நின்று போகிறாராம். இப்போது பக்ஷணம் கொஞ்சம் தின்றார்" என்று வைத்துவிட்டு போய்விட்டாள்.

ருக்மிணி மனத்துக்குள்ளே சிரித்துக்கொண்டாள். மறுநாள் அம்மாஞ்சியைக் கிணற்றடியில் கண்டபொழுது, ருக்மிணி, "அசட்டு அம்மாஞ்சி தானா நீ?" என்று சிரிப்பும் குறும்புமாகக் கேட்டு ஓடி வந்துவிட்டாள். "அசடுதான் நான்! முட்டாள்!" என்று ராஜாராமன் மனத்துக்குள்ளே முணுமுணுத்துப் பதிலளிப்பதை அறிந்தவள் போல ஓடி வந்தாள்.

ராஜாராமன் ஊருக்குப் புறப்பட்டுப் போன மறுநாளே வத்ஸலா கணவனுக்குப் போட்ட கடிதமும் போய்ச் சேருமுன்பே ரெயிலிருந்தபடியே ராஜாராமன் எழுதிப்போட்ட கடிதமும் வழியிலே எங்கேயோ சந்தித்து ஒரே ஒரு கணம் குலவிக் கொஞ்சிக் களித்துவிட்டு, உரியவரிடம் வந்து சேர்ந்தன.

தனக்கு வந்த முதல் காதல் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்துக் களித்த வத்ஸலாவுக்கு அதிலே ஒரு வரி மட்டும் விளங்கவில்லை.

மதனி தனியே இருந்தபொழுது அவளருகே வந்தாள். ஏதேதோ பேசினாள், வத்ஸலா.

"அகத்துக்காரர் எழுதினதை மட்டும் சொல்லமாட்டீர்களாக்கும்!" என்று கிண்டல் செய்தாள் ருக்மிணி.

அதைச் சாக்கிட்டு வத்ஸலா, "புரிந்தால் தானே சொல்ல?" என்று கூறினாள்.

"என்ன? அத்தனை பேத்தலா?" என்று தாக்கினாள் ருக்மிணி.

"நீங்கள் என்னவோ சொன்னதாகவும் நிஜமாகவே அசட்டு அம்மாஞ்சி ஆகிவிட்டதாகவும் எழுதியிருக்கிறார்" என்று இழுத்தாற்போலப் பதிலளித்தாள்.

"அப்படியா எழுதியிருக்கிறான்? அப்படியா? ஐயோ பாவம்! அசட்டு அம்மாஞ்சி; அசட்டு அம்மாஞ்சி!" என்று சிரித்தாள் ருக்மிணி. "வத்ஸலா, மாட்டிக் கொண்டுவிட்டீர்கள் என்னிடம் அம்மாஞ்சி வந்திருந்த முதல் மூன்று நாளும் உங்களை ஏமாற்றிவிட்டானாக்கும்!" என்று சிரித்தாள். திகைத்தாள் வத்ஸலா "வத்ஸலா, சொன்னால் தெரியாது, இதோ வருகிறேன்" என்று கூறிவிட்டு எழுந்து போனாள் ருக்மிணி. ஒரு காகிதத்திலே ஏதோ எழுதிக்கொண்டு வந்தாள்.

"அம்மாஞ்சி, நீ நிஜமாகவே அசட்டு அம்மாஞ்சி ஆகிவிடப் போகிறாயே என்று பயந்து போய்த்தான் இதை எழுதுகிறேன். வத்ஸலா கல்யாணத்துக்கு முன்பே சவால்விட்டிருக்கிறாள். மனைவி கடிதம் எழுதும்முன் அவளுக்குக் கடிதம் போடும் புருஷன், பெண்டாட்டி தாஸனாம். மனைவியை முதலில் தீண்டும் புருஷன் பெண்ணாசை பிடித்தவன் என்று என்ன என்னவோ சொல்கிறாளப்பா. அவளே உனக்குக் கடிதம் போடும் வரையில் நீ எழுதாதே; அடுத்த விஷயமும் அப்படித்தான். அவசரப்பட்டுவிட்டாயோ, அவள் உன்னை மதிக்கவே மதிக்காமல் அசட்டு அம்மாஞ்சியே ஆக்கிவிடுவாள் உஷார்!"

ருக்மிணி இவ்வாறு எழுதிய காகிதத்தைக்காட்டி "முன்தியே இப்படி ஒரு கடுதாசி போட்டேன்!" என்றாள்.

"அநியாயத்தைப் பாரேன்! ஏன் மன்னி, பொய்யும் புளுகும் எழுதினாய்?" என வினாவினாள், முறிந்தகுரலில்.

"கொஞ்சம் நிஜத்தோடு கற்பனையும் செய்தால்தானே தமாஷ் வத்ஸலா? அது கிடக்கட்டும், அவன் எழுதாமல் உங்களுக்கு எழுதத்தைரியமில்லையே உண்மையைச் சொல்லுங்கள் என்றாள் சிரித்தபடியே ருக்மிணி.

"ஆம் என்னும் வசையில் தலை அசைத்தாள் வத்ஸலா

"அகத்துக்காரர் வந்ததுமே மாறிவிட்டீர்கள் அல்லவா? நானும் பிறந்தகத்திலே உங்களைப் போல இருந்தவள்தான். உங்கள் அண்ணா தான் மாற்றிவிட்டார். தெரிந்ததா?" என்று சிரிப்பை விட்டுவிடாமல் கேட்டாள் ருக்மிணி.

"மாறுகிறதா? பிறந்தகத்து ஆளைக் கண்டதும் அட்டகாசம் செய்தாயிற்றே திரிசமன்பண்ணி என்னை அவர் மட்டமாய் மதிக்கும்படி செய்துவிட்டாயே!" என்றால் வத்ஸலா.

**********

( சுதேசமித்திரன், டிசம்பர் 1, 1950)